No. of Printed Pages : 3

**BESE-046**

01304

# இளநிலை கல்வியியல்
# பருவத்தேர்வு (B.Ed.)

**Term-End Examination**

**December, 2016**

## BESE-046 : தமிழ் கற்பித்தல்
## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

**குறிப்பு :** (அ) அனைத்து வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.

(ஆ) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பீடு சமம்.

**1.** கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடை யளிக்கவும்.

மாணவர் தம் கட்டுரைப் பயிற்சிகளில் மிகுதியாகக் காணப்படும் பிழைகள் யாவை? அவற்றை நீக்க மேற்கொள்ளத் தக்க வழிமுறைகள் யாவை?

**அல்லது**

நிரல் வழிக் கற்றல் என்னும் புதிய கற்றல் முறையை அதன் பல்வேறு கூறுபாடுகளுடன் விளக்குக.

2. கீழே கொடுக்கப் பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். கற்றலில் படித்தல் திறன் இன்றியமையாதது என்பதை நிறுவி, அதனைக் கற்பிக்கும் வழிமுறைகளை எடுத்துரைக்க.

**அல்லது**

மொழி கற்பித்தலில் நடிப்பு முறையின் பயன்பாட்டையும், அதனைக் கையாள வேண்டிய வழிமுறைகளையும் குறிப்பிடுக.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் எவையேனும் **4 (நான்கு)** வினாக்களுக்கு **150** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(அ) கற்பித்தலில் சொற்பொழிவு முறையின் குறை, நிறைகளை விளக்குக.

(ஆ) கேட்குந் திறனின் மூன்று நிலைகளை விவரிக்க.

(இ) இடைநிலை வகுப்புக்களில் வாய் மொழிப் பயிற்சியளிக்க மேற் கொள்ளத் தக்க வழிமுறைகளை விவரிக்க.

(ஈ) செய்யுள் கற்பிப்பதன் நோக்கங்களை விவரிக்க.

(உ) இலக்கண வகைகள் யாவை? அவற்றை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

(ஊ) மொழிப் பயிற்சிகள் தரும்போது விளையாட்டு முறையை மேற்கொள்ள லாம் என்பதனை எடுத்துக் காட்டுடன் நிறுவுக.

(எ) வினாத்தாள் அமைக்கும் போது ஓர் ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

(ஏ) திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களின் தமிழ்த் தொண்டினை விவரி.

4. கீழே கொடுக்கப் பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

பள்ளிகளில் தற்போது செயல்பாட்டிலுள்ள மொழிப் பாடத்திட்டம் காலத்தின் மாற்றங்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப அமைந்துள்ளதா என்பதை ஆராய்ந்து அங்ஙனம் அமைய உமது பரிந்துரைகளை எடுத்துரைக்கவும்.